# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8109497

1. District மாவட்டம் : திருச்சி | PS: காவல்நிலையம் ஊ.த.க.பா.பி | Year: ஆண்டு 2023 | FIR No.: மு.த.அ. எண் 05 | Date: நாள் 29.03.2…

2. (i) Act சட்டம்: ஊழல் தடுப்பு சட்டம் 1988 | Sections பிரிவுகள்: 7 (b)
   (ii) Act சட்டம்: (திருத்தம் 2018) | Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் 24.03.23 | Date to : நாள் வரை 28.03.23
   Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் 1430 Hrs | Time to : நேரம் வரை 1200 Hrs.
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 29.03.'23 | Time : நேரம் 1500 Hrs.
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 29.03.'23 | Time : நேரம் 1700 Hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — எழுத்து மூலமாக (Computerised)

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் 30 km வடமேற்கு
   Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் வை. அகிலாண்டேஸ்வரி | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் திரு. வையாபுரி
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 20.06.88 | (d) Nationality : நாட்டினம் இந்தியன் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் [illegible] | (g) Address : முகவரி எண். 430, பண்ணை [illegible] தோட்டம், சி. அய்யம்பாளையம், மண்ணச்சநல்லூர் வட்டம், திருச்சி மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   திருமதி. பூரணியம்மாள், VAO, சி. அய்யம்பாளையம் கிராம…
   மண்ணச்சநல்லூர் வட்டம், திருச்சி மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   — வாதியால் தாமதம் —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில்

இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ………………… Rank ………………… to take up the Investigation / Refused Investigation / transferred to PS………………………………………on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ………………………… பதவி ………………… நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ………………………………………… காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

V Akilandeshwari 29/3/2023

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
29/3/23

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 29/3/23.

Name: பெயர் பாலமுருகன்
Rank: நிலை …………… No. எண் ……

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்கு சிறப்பு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி முன்பாக பணிந்து சமர்பிக்கப்படுகிறது.

திருச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.05/2023—ன் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி:—

திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான், இன்று (29.03.2023) மதியம் 15.00 மணியளவில் அலுவலகத்தில் பணியில் இருந்த போது திருச்சி மாவட்டம், மண்ணச்சநல்லூர் வட்டம், சா.அய்யம்பாளையம், பண்டிதகாரர் கொட்டம், எண்.430, வசிக்கும் சின்னதுரை மனைவி வை.அகிலாண்டேஸ்வரி என்பவர் கொடுத்த புகார் மனுவை பெற்று, அது குறித்து சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, இயக்குநரகத்திற்கு தெரிவித்து, அந்த புகார்மனு குறித்து முதல் கட்ட விசாரணை செய்து, புகார் மனுவில் கூறப்பட்டுள்ள திருச்சி மாவட்டம், மண்ணச்சநல்லூர் வட்டம், சா.அய்யம்பாளையம் கிராம வி.ஏ.ஒவாக பணிபுரியும் திருமதி.பழனியம்மாள், புகார்தாரர் திருமதி.அகிலாண்டேஸ்வரி ஆகியோர்களின் முன் நடத்தைகள் பற்றி இரகசிய விசாரணை செய்யப்பட்டது. இன்று 29.03.2023 மாலை 17.00 மணிக்கு திருச்சி; ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு, குற்ற எண்.05/2023 சட்டப்பிரிவு 7(b) ஊழல் தடுப்பு சட்டம் 1988 (as amended in 2018)—ன் படி வழக்கு பதிவு செய்தேன். புகார்மனுவின் விபரம் பின்வருமாறு. அனுப்புனர் வை.அகிலாண்டேஸ்வரி, வயது 35/2023, த/பெ.வையாபுரி, க/பெ.சின்னதுரை, எண்.430, பண்டிதகாரர் கொட்டம், சா.அய்யம்பாளையம், மண்ணச்சநல்லூர் வட்டம், திருச்சி மாவட்டம். பெறுனர் உயர்திரு. லஞ்ச ஒழிப்புத்துறை ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, திருச்சி மாவட்டம். ஐயா, நான் திருச்சி மாவட்டம் மண்ணச்சநல்லூர் வட்டம் சா.அய்யம்பாளையத்தில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் பி.காம்., எல்.எல்.பி படித்துள்ளேன். எனக்கு திருமணமாகி ஒரு பையன் உள்ளான். எனது தகப்பனாருக்கு நான் முதலாவது பெண். எனக்கு அடுத்து இரண்டு தங்கைகளும் ஒரு தம்பியும் உள்ளனர். எனது தகப்பானார் வையாபுரி கடந்த 1995—ம் ஆண்டு, ராமசாமி என்பவரிடமிருந்து சா.அய்யம்பாளையத்தில் ஒன்பது சர்வே எண்களில் கட்டுப்பட்ட பட்டா எண்கள் முறையே 2684, 3891 மற்றும் 4161—ல் உள்ள 29 சென்ட் நிலத்தினை வாங்கியிருந்தார். மேற்சொன்ன பட்டா எண்கள் என் அப்பா பெயருக்கு மாற்றப்படாமல் ராமசாமி பெயரிலேயே பதிவுகள் இருந்தது. எனது தகப்பானுருக்கு வயதான காரணத்தினால், பட்டாவில் பெயர் மாற்றம் செய்யும் வேலையை செய்து தருமாறு என்னிடம் கூறியிருந்தார். அதன்பேரில், பட்டாவில் இருந்த ராமசாமி பெயரை நீக்கிவிட்டு எனது அப்பா வையாபுரி பெயரில் பெயர் மாற்றம் செய்ய வேண்டி கடந்த 28.02.2023 அன்று மண்ணச்சநல்லூரில் உள்ள இ—சேவை மையத்தில்

விண்ணப்பம் செய்தேன். அந்த விண்ணப்பத்தில் எனது செல்போன் எண்ணை அளித்திருந்தேன். பின், நான்கு ஐந்து நாட்களுக்கு பிறகு ஒரு நாள் சா.அய்யம்பாளையம், வி.ஏ.ஓ. அலுவலகத்திற்கு சென்று அங்கிருந்த வி.ஏ.ஓ. திருமதி.பழனியம்மாள் என்பவரை சந்தித்து எனது தகப்பனார் பெயரில் பட்டா பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பம் செய்திருந்த விபரத்துடன் அது தொடர்பான அனைத்து ஆவணங்களையும் அவரிடம் கொடுத்தேன். அதற்கு வி.ஏ.ஓ விசாரித்து விட்டு கூப்பிடுவதாக சொல்லி அனுப்பிவைத்தார். பின்னர் தொலைபேசி மூலம் வி.ஏ.ஓ அழைத்ததின் பேரில் 24.03.23 அன்று மதியம் 2.30 மணி சுமாருக்கு வி.ஏ.ஓ அலுவலகம் சென்று பார்த்தேன். அப்போது எல்லாம் சரியாக இருக்கும்மா, உங்களுக்கு பட்டா பெயர் மாற்றம் செய்து கொடுத்துவிடுகிறேன். அதற்கு 5000 ரூபாய் தரவேண்டும் என்று கூறினார். அதற்கு நான் எதற்கு 5000 ரூபாய் தரவேண்டும் என்று கேட்டேன் அதற்கு வி.ஏ.ஓ. பழனியம்மாள் என்னம்மா அட்வகேட்டா இருக்கீங்க, நெறைய செலவுகள் இருக்கும்மா, அதற்குத்தான் இந்த ஐயாயிரம் கேக்கிறேன் என்றார். சரிங்க மேடம், நான் எங்க அப்பாகிட்ட கேட்டு சொல்கிறேன் என்று கூறிவிட்டு வந்துவிட்டேன். இந்நிலையில் கடந்த 25.3.2023 சனிக்கிழமை அன்று மாலை சுமார் 5.50 மணிக்கு எனது செல்போனுக்கு ஒரு குறுஞ்செய்தி வந்தது. அதில், பட்டா பெயர் மாற்றம் விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டுவிட்டதாக குறிப்பிட்டிருந்தது. சிறிது நேரத்தில் வி.ஏ.ஓ. பழனியம்மாள் என்னை செல்போனில் தொடர்பு கொண்டு உங்க வேலையை முடிச்சிக் கொடுத்திட்டேன். நான் ஏற்கனவே கேட்டிருந்த பணத்தோட திங்கக்கிழமை ஆபீசுக்கு வந்து பாருங்கள் என்று கூறி போனை வைத்துவிட்டார். அதற்கு பிறகு நான் குடும்பத்துடன் பழநி சென்றுவிட்டேன். திங்கள் கிழமை நான் பழநியில் இருந்தபோது சா.அய்யம்பாளையம் கிராம உதவியாளர் எனது செல்போனுக்கு என்னை அழைத்து வி.ஏ.ஓ அம்மா உங்களை வரச் சொல்கிறார்கள் என்று அழைத்தார். அதற்கு நான் பழநியில் இருப்பதாகவும், மறுநாள் வருவதாகவும் சொல்லிவிட்டேன். பின் 28.3.2023 செவ்வாய்க்கிழமை மதியம் 12 மணி சுமாருக்கு நான் வி.ஏ.ஓ. அலுவலகம் சென்று வி.ஏ.ஓ. பழனியம்மாளை சந்தித்தேன். அப்போது அவர், நேற்றே வரச்சொன்னேனே என்று கூறிவிட்டு, உங்க வேலையை முடிச்சிக் கொடுத்திட்டேன், நான் ஏற்கனவே கேட்டிருந்த 5000 ரூபாய கொண்டு வந்திருக்கீங்களா என்று கேட்டார். அதற்கு நான், இல்ல மேடம் அப்பாகிட்டதான் கேக்கணும், என்று சொன்னேன். அதற்கு அவர், இதுக்குதாம்மா பணம் வாங்காம வேலைய முடிச்சி கொடுத்திட்டா, உங்ககிட்டயிருந்து பணம் வாங்க நாங்க அலைய வேண்டியிருக்கும் என்று கோபமாக கூறிவிட்டு, ரெண்டு நாள்ல பணத்தோட வாங்கம்மா என்று கூறினார். சரிங்க மேடம் அப்பாவிடம் கேட்டு வாங்கி வருகிறேன் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். இந்த விபரத்தினை எனது தகப்பானாரிடம் சொன்னபோது, அவர் வி.ஏ.ஓ.பழனியம்மாள் கேட்ட லஞ்சப்பணம் ஐயாயிரத்தை அவருக்கு தர

வேண்டாம், லஞ்ச ஒழிப்புத்துறைக்கு சென்று நடவடிக்கை எடுக்கலாம் என்று கூறினார். எனது அப்பா பெயரில் உள்ள பட்டாவில் பெயர் மாற்றம் செய்து கொடுத்ததற்கு ஐயாயிரம் ரூபாய் லஞ்சம் கேட்ட சா.அய்யம்பாளையம் வி.ஏ.ஒ. பழனியம்மாள் மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். இத்துடன் எனது அப்பா பெயரிலிருந்து பத்திரத்தின் நகல், ஆன்லைன் விண்ணப்பத்தின் நகல் மற்றும் எனது அப்பா பெயருக்கு பெயர் மாற்றம் ஆகியிருந்த பட்டாவின் நகல் ஆகியவற்றையும் இணைத்துள்ளேன். இப்படிக்கு, Sd.xxx (Akiladeshwari) 29.03.2023. Submitted to the Court of the Hon'ble Special Judge, Special Court for the trail of Pc Act cases, Trichy. Received the complaint on 29.03.2023 at 15.00 Hrs., made Preliminary Enquiry and registered a case in Trichy V&AC Cr.No.05/2023 u/s 7(b) of Prevention of Corruption Act 1988 (as amended in 2018) at 17.00 Hrs., on 29.03.2023. Sd.xxx (K.BALAMURUGAN) 29/3/2023 Inspector of Police, V&AC, Trichy.

29/3/23
Inspector of Police,
V&AC, Trichy.